# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.532/2024
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
(Court

| Name | சோபனா | -- | |
|---|---|---|---|
| Husband's Name | அசோக்குமார் | Calling | பயர் ஆஃபிஸ் |
| Village | மானகசேரி | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of December 2025.

**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் தாலுகா மானகசேரி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். விபத்தில் இறந்துபோன வள்ளியம்மாள் எனது தாயார். கடந்த 03.12.2023ம் தேதியில் வள்ளிமயில் திருமணத்திற்கு துணி எடுப்பதற்காக மானகசேரியிலிருந்து திருவில்லிபுத்தூருக்கு சேர் ஆட்டோவில் சென்றோம். மேற்படி TN67BA1356 ஆட்டோவை எதிரி ஈஸ்வரன் ஓட்டிச் சென்றார். ஆட்டோவில் நானும், எனது தங்கை வள்ளிமயில் என்பவரும் இருக்கையில் அமர்ந்திருந்தோம். எனது அம்மாவும், சித்தி பால சரஸ்வதி, முத்துலெட்சுமியும் பின்பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். ஆட்டோ ஓட்டுநருக்கு அருகில் எனது சித்தப்பா மாரிமுத்து உட்கார்ந்திருந்தார். எனது இரண்டு வயது குழந்தையும், பால சரஸ்வதியின் 12 வயது சிறுமியும் எங்களோடு ஆட்டோவிற்குள் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது பகல் 12.00மணி இருக்கும். அப்போது கொளுர்பட்டி அருகே சென்று கொண்டிருந்தபோது ஆட்டோ வேகமாக சென்றதால் எனது அம்மா கீழே விழுந்துவிட்டார். எனது சித்தி பால சரஸ்வதி கத்தியவுடன் நாங்கள் திரும்பி பார்த்து ஆட்டோவை நிறுத்தி இறங்கிப்போய் எனது அம்மாவை அதே ஆட்டோவில் வைத்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அப்போது எனது அம்மா மூச்சு பேச்சு இல்லாமல் இருந்தார். எனது அம்மா சிகிச்சையில் சேர்ந்த அரைமணி நேரத்தில் அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து எனது அம்மாவின் பிரேதத்தை வாங்கிச் சென்று எங்கள்

ஊரில் எரியூட்டிவிட்டோம். பின்னர் இது குறித்து நான் திருவில்லிபுத்தூர் போலிசாரிடம் புகார் மனு கொடுத்தேன்.  இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.
**குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969
on the 19th day of December 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN
Digitally signed by M VEERANAN
Date: 2025.12.19 16:32:17 -0400

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**